**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08ஆம் நாள் வியாழக்கிழமை

**IA.No.02/2025 in OS.No.47/2025**

**TNTM 03000062/2025**

1. S. செந்தில்குமார்
2. ஆனந்தி ... மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள்

/எதிராக/

1. சுகந்தி
2. மோகனா ...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.சசிகுமார்,B.A.,B.L., திரு.A.கணேஷ், MBA.,B.L., ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.கார்த்திகேயன், திரு.R.முத்துராஜ், ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கின் வழக்குரையை நிராகரிக்கவேண்டி (Rejection of Plaint) உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 11ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:**

அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி, இந்த மனுவில் 1ம் மனுதாரர். 2ம் மனுதாரருக்காகவும், இம்மனுவை தாக்கல் செய்கிறார். அசல் வழக்கை வாதிகள் தங்களுக்கு 'A' அட்டவணை சொத்தில் 2/3 பாகம் இருப்பதாக விளம்புகை பரிகாரம் வேண்டியும், சுவாதினத்தை அளிக்க வேண்டும் என்றும் 29.01.2015 தேதியிட்ட தான பத்திரத்தை செல்லாது என்று விளம்புகை செய்யவும், 29.01.2025 தேதியிட்ட கிரைய ஆவணத்தை செல்லாது என்று விளம்புகை செய்ய வேண்டியும் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகள் தவறான விவரம் கூறி, மோசடியாக இந்த வழக்கை மனுதாரருக்கு எதிராகவும் எனது மனைவியான 4ம் பிரதிவாதிக்கு எதிராகவும் தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகள் தூய கரத்துடன் நீதிமன்றத்திற்கு

வரவில்லை. உண்மை விவரங்களை மறைத்தும் தவறான விவரங்களை கூறியும் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வாதிகளுக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல.

2. வாதிகள் A.சுப்பிரமணி என்பவரின் மகள்கள் ஆவார்கள். அவர்களுக்கு உரிய முறையில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டது. வாதிகளின் தந்தை A.சுப்பிரமணி 2 மற்றும் 3 பிரதிவாதிகளான பாபு மற்றும் செந்தில் குமாருக்கு 15.11.2012ல் எழுதிக் கொடுத்த தான பத்திரம் குறித்து வாதிகளுக்கு ஏற்கனவே தெரியும். மேற்படி தான பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட பிறகு 2 மற்றும் 3 பிரதிவாதிகள் அதனை ஏற்றுக்கொண்டு சொத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். தான பத்திரம் நடைமுறைக்கு வந்துவிட்டது. மேற்படி தான பத்திர விவரத்தை வாதிகள் வேண்டுமென்றே மறைத்துள்ளார்கள். தான பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட விவரம் 2012ஆம் ஆண்டிலிருந்து வாதிகளுக்கு தெரியும். வாதிகள் 15.11.2012 தேதியிட்ட தான பத்திரத்தை ரத்து செய்ய பரிகாரம் கோராமல் இந்த வழக்கை வேண்டுமென்றே தவறான எண்ணத்துடன் தாக்கல் செய்துள்ளார்கள். ஏனென்றால் 15.11.2012 தேதியிட்ட தான பத்திரத்தை ரத்து செய்ய பரிகாரம் கோருவதற்கு கால வரையறை முடிந்து விட்டது. மேற்படி ஒரு காரணத்திற்காகவே வழக்குரையை நிராகரிக்க வேண்டும். எனது தகப்பனார் சுப்பிரமணிக்கு கிடைத்த பாக சொத்தின் ஒரு பகுதியை எ.சுப்பிரமணி, 2ம் பிரதிவாதி பாபு, 1ம் வாதி சுகந்தி, 2-ம் வாதி மோகனா, பழனி, உமாபதி சுரேஷ், ராஜா மற்றும் மனுதாரர் ஆகியோர் சேர்ந்து 28.02.2013ஆம் தேதி ராணி, வேல்முருகன், வெங்கடேசன் மற்றும் சரவணன் என்பவருக்கு விற்பனை செய்து விட்டார்கள். அந்த பதிவு செய்யப்பட்ட விற்பனை கிரைய ஆவண எண் 1678/2013 ஆவணத்தில் செந்தில்குமார் நிலத்திற்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கிரைய ஆவணம் எழுதப்பட்ட தேதியிலிருந்து வாதிகளுக்கு மனுதாரர் பெயரில் தானபத்திரம் எழுதப்பட்ட விவரம் தெரியும். மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில் ஏற்கனவே தான பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் வாதிகளுக்கு தெரியும். மேற்படி விவரம் தெரிந்து கொண்டே வேண்டுமென்றே அந்த சங்கதியை மறைத்து வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே உரிய விவரங்களை மறைத்து, காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, வழக்கு ஏற்புடையதல்ல. காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

3. வாதிகள் இந்த வழக்கை 2/3 பாகத்திற்காகவும், விளம்புகை பரிகாரத்திற்காகவும் சுவாதீனம் கேட்டும் வழக்கை தாக்கல் செய்துள்ளதால், வழக்கு சொத்தின் சந்தை மதிப்பிற்குரிய ரூ.4,30,000/-த்திற்கு முழு நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டும். குறைந்த மதிப்பிற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தி இருப்பதால்

வழக்குரையை நிராகரிக்க வேண்டும். பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யாமல், சொத்துக்களில் 2/3 பாகம் இருப்பதாக விளம்புகை செய்ய ஏ அட்டவணை சொத்தை பொறுத்து தாக்கல் செய்துள்ள வழக்கை நிராகரிக்க வேண்டும். மேலும் வழக்குரையில் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கான வழக்கு மூலம் குறித்து விவரம் கூறப்படவில்லை. உரிய வழக்கு மூலத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் வாழ்க்கை நிராகரிக்க வேண்டும். வாதிகள் வழக்கு சொத்தின் மதிப்பை குறைவாக மதிப்பீடு செய்து குறைவான நீதிமன்ற கட்டணம் செலுத்தி இருப்பதாலும், பாகப்பிரிவினை பரிகாரம் கேட்காததாலும் வழக்குரையை நிராகரிக்க வேண்டும். விளம்புகை மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரத்திற்கு குறைவான மதிப்பீடு செய்து உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்பதாலும், பாகப்பிரிவினை பரிகாரம் இல்லாமல், விளம்புகை பரிகாரம் கோர முடியாது என்பதாலும், வழக்கிற்கு உரிய வழக்குமூலம் இல்லை என்பதாலும், மனுவை ஏற்று வழக்குரை நிராகரிக்க வேண்டும். வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே வழக்குரையை நிராகரிக்க வேண்டும்.

4. <u>எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம்:</u>

'A' அட்டவணை சொத்தை பொறுத்து வாதிகளுக்கு 2/3 பாகம் உள்ளது என்று விளம்புகை பரிகாரம் வேண்டியும், 29.01.2025 தேதியிட்ட 4ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட தான பத்திரம் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் வேண்டியும், 29.01.2025 தேதியிட்ட 5 மற்றும் 6ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கிரைய ஆவணம் செல்லாது என்று விளம்புகை செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 02.09.2025ம் தேதி 1, 2 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள். 7ம் பிரதிவாதியும் அதே தேதியில் தாக்கல் செய்துள்ளார். 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய வழக்கு நிலுவையில் உள்ளது. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட 5 மாதங்களுக்கு பிறகு 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரையை நிராகரிக்க இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் ஏற்கும் வகையில் இல்லை. எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்பு உரிமையில் நடைமுறை சட்டம் கட்டளை.7 விதி.11–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட வேண்டும். ஆனால் இந்த மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்பாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 1, 2 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கிற்கு உரிய வழக்கு மூலம் உள்ளது. வழக்கு சொத்து உரிய முறையில் மதிப்பீடு செய்யப்பட்டு உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு காலவதி தோசத்தால் பாதிக்கப்படவில்லை. மனுவின் பிரமாண வாக்குமூலத்தின் 10வது பத்தியில்

குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறித்து உரிய விசாரணைக்கு பிறகு தான் தீர்வு காண முடியும்.

5. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறித்து வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவண சாட்சியத்தின் மூலம் உரிய விசாரணைக்கு பிறகு தான் தீர்வு காண முடியும். பாகப்பிரிவினை பரிகாரம் கோராமல் விளம்புகை பரிகாரம் கோர முடியாது என்பது, விசாரணைக்கு பிறகு தான் முடிவு செய்ய முடியும். குறைவாக சொத்து மதிப்பீடு செய்யப்பட்டு வழக்கு தாக்கல் செய்திருப்பதாக கூறியிருப்பது ஏற்புடையதல்ல. 2/3 பாகம் குறித்து விளம்புகை கோருவதற்கு உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்க மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார்கள். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

6. <u>**மனுதாரர்கள் தரப்பு வாதுரையின் சுருக்கம்:**</u>

வாதிகளின் தகப்பனார் சுப்பிரமணிக்கு 10.10.1995 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் 'A' மற்றும் 'B' சொத்துக்கள் கிடைத்தது. பாகப்பிரிவினைக்கு பிறகு சுப்பிரமணி தனக்கு பாகமாக கிடைத்த 76 மற்றும் 63 சென்ட் இடங்களை 3ம் நபர்களுக்கு விற்பனை செய்து விட்டார். சுப்பிரமணி தனது மகன்களான 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு தலா 2 ஏக்கர் வீதம் தானபத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். மேலும் மற்றொரு 30 மற்றும் 20 சென்ட் இடங்களை விற்பனை செய்துள்ளார். வாதிகளின் தகப்பனார் 10.05.2024ல் இறந்து விட்டார். வாதிகளின் தகப்பனார் இறந்த பிறகு தான் மேற்படி விவரங்கள் தெரிய வந்ததாக கூறி இருக்கிறார்கள். ஆனால், 28.02.2013 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் செந்தில்குமார் நிலத்திற்கு வடக்கு என்று விவரம் கூறப்பட்டுள்ளது. மேற்படி 28.02.2013 தேதியிட்ட கிரைய ஆவணத்தின்போதே 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு தானபத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட விவரம் தெரிந்து கொண்டே தற்போது 2/3 பாகம் இருப்பதாக விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல. இந்த வழக்கிற்க்கு வழக்கு மூலம் இல்லை. 2013 ஆம் ஆண்டில் வாதிகள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் செந்தில்குமார் இடத்திற்கு நிலத்திற்கு வடக்கு என்று குறிப்பிட்டுள்ளதால் 3 வருட காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். எனவே வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், வழக்கு சொத்துக்களை குறைவாக மதிப்பு செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகள் எழுதிக் கொடுத்த 28.02.2013ம் தேதியிட்ட ஆவணத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 12 ஆண்டுகளுக்கு பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே வழக்கு காலாவதி தேசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. வாதிகளின் தகப்பனார்

சுப்பிரமணி, 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த 15.11.2012 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யக்கோரி பரிகாரம் தாக்கல் செய்யாமல் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே வழக்குரையை நிராகரிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. **<u>எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பு வாதுரையின் சுருக்கம்:</u>**

வாதிகளின் தகப்பனார் சுப்பிரமணிக்கு பாகமாக கிடைத்த சொத்தை 15.11.2012ல் இரண்டு ஆவணங்கள் மூலம் வாதிகளின் தகப்பனார் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு தான பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். வழிகாட்டி சந்தை மதிப்பின் அடிப்படையில் நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. பாகப்பிரிவினை கேட்டு தனியாக வழக்கு தாக்கல் செய்ய இருக்கிறோம். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் இந்த வழக்கை அனுமதிக்க வேண்டுமென்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு தாக்கல் செய்ய வழக்கு மூலம் உள்ளது. 3ம் பிரதிவாதி தனது மனைவியான 4ம் பிரதிவாதிக்கு தான பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். மேற்படி விவரங்கள் தெரிந்த பிறகு 3 வருட காலத்திற்குள் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் வாதி சொத்து வாங்கவில்லை. எனவே ம.சா.ஆ.1–ல் உள்ள சொத்து விவரங்கள் குறித்து வாதிக்கு தெரிய வாய்ப்பில்லை. மேலும் ம.சா.ஆ.1–ல் உள்ள நான்கு எல்லை விவரங்கள் குறித்தும் வாதிகளுக்கு தெரிய வாய்ப்பில்லை. தந்தை இறந்த பிறகு தான் முந்தைய ஆவணங்கள் பற்றி வாதிகளுக்கு தெரியவந்தது. வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு தான் 3ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு தானபத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். அதன் பிறகு தான் கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, வழக்கில் உள்ள பிரச்சனையை முழு விசாரணைக்கு பிறகு தான் தீர்வு காண முடியும்.

8. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

9. **<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வாதிகள் உண்மையான விவரங்களை மறைத்து மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். நீதிமன்றத்தை வாதிகள் தூய கரங்களுடன் அணுகவில்லை. வாதிகளின் தகப்பனார் சுப்பிரமணி உயிருடன் இருக்கும் போது அவருக்கு பாகமாக கிடைத்த சொத்துகளை 15.11.2012ஆம் தேதி 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு தானபத்திரம் மூலம் எழுதி வைத்த விவரம் வாதிகளுக்கு தெரியும். மேற்படி விவரத்தை மறைத்து இந்த வழக்கை வாதிகள்

தாக்கல் செய்துள்ளார்கள். 15.11.2012 தேதியிட்ட தானபத்திரங்களை ரத்து செய்ய பரிகாரம் கோராமல், அந்த விவரத்தை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி ஒரே காரணத்திற்காக வழக்குரையை நிராகரிக்க வேண்டும். வாதிகளின் தகப்பனாருக்கு பாகமாக கிடைத்த சொத்தை, வாதிகளின் தகப்பனார் மற்றும் வாதிகள், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் சேர்ந்து 28.02.2013ஆம் தேதி ராணி, வேல்முருகன், வெங்கடேசன் மற்றும் சரவணன் ஆகியோருக்கு ஆவண எண்.1678/2013 என்ற கிரைய ஆவணத்தின் மூலம் விற்பனை செய்துள்ளார்கள். அந்த கிரைய ஆவணத்தில் நான்கு எல்லையாக செந்தில்குமார் நிலத்திற்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி விவரங்கள் தெரிந்து கொண்டே வாதிகள் அதனை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகளின் வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. 28.02.2013 தேதியிட்ட கிரைய ஆவண விவரத்தை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். முக்கியமான உண்மை விவரங்களை மறைத்த காரணத்திற்காகவும், காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்ட காரணத்திற்காகவும் வழக்குரையை நிராகரிக்க வேண்டும். 'A' அட்டவணை சொத்தில் வாதிகளுக்கு 2/3 பாகம் உள்ளது என்று விளம்புகை கோரியும் அவர்களிடம் சுவாதீனம் ஒப்படைக்க வேண்டி பரிகாரம் கோரப்பட்டுள்ள நிலையில், 'A' அட்டவணை சொத்துக்கான சந்தை மதிப்பிற்குண்டான முழு மதிப்பிற்கும், நீதிமன்ற கட்டணம் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் வாதிகள் அவ்வாறு நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் குறைவான நீதிமன்ற கட்டணம் செலுத்தி உள்ளார்கள் எனவே வழக்குரையை நிராகரிக்க வேண்டும். வாதிகள் தங்களுக்குரிய 2/3 பாகம் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்காமல், 'A' அட்டவணை சொத்தில் 2/3 பாகம் உரிமை உடையதாக விளம்புகை பரிகாரமும், சுவாதீனம் வேண்டியும், பரிகாரம் கேட்க முடியாது. இந்த வழக்கிற்கு வழக்குமூலம் ஏற்படவில்லை. 'A' அட்டவணை சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரமும், சுவாதின பரிகாரமும் கோரி இருப்பதால் 'A' அட்டவணை சொத்திற்குண்டான மொத்த மதிப்பிற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாததால் வழக்குரையை நிராகரிக்க வேண்டும். வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை. சொத்து மதிப்பு குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. உரிய நீதிமன்ற கட்டணம் கட்டவில்லை. காலாவதி தோஷத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது ஆகிய காரணங்களுக்காக வழக்குரையை நிராகரிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், 'A' அட்டவணை சொத்தை பொறுத்து வாதிகளுக்கு 2/3 பாகம் உள்ளது என்று விளம்புகை பரிகாரம் வேண்டியும், 29.01.2025 தேதியிட்ட 4ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட தான பத்திரம் செல்லாது என்று விளம்புகை செய்ய பரிகாரம்

வேண்டியும், 29.01.2025 தேதியிட்ட 5 மற்றும் 6–ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கிரைய ஆவணம் செல்லாது என்று விளம்புகை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 02.09.2025ம் தேதி 1, 2 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள். 7ம் பிரதிவாதியும் அதே தேதியில் தாக்கல் செய்துள்ளார். 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய வழக்கு நிலுவையில் உள்ளது. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட ஐந்து மாதங்களுக்கு பிறகு 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரையை நிராகரிக்க இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் ஏற்கும் வகையில் இல்லை. எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்பு உரிமையில் நடைமுறை சட்டம் கட்டளை.7 விதி.11–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட வேண்டும். ஆனால், இந்த மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்பாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 1, 2 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கிற்கு உரிய வழக்கு மூலம் உள்ளது. வழக்கு சொத்து உரிய முறையில் மதிப்பீடு செய்யப்பட்டு உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்படவில்லை. மனுவின் பிரமாண வாக்குமூலத்தின் 10வது பத்தியில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறித்து உரிய விசாரணைக்கு பிறகு தான் தீர்வு காண முடியும்.

11. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறித்து வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவண சாட்சியத்தின் மூலம் உரிய விசாரணைக்கு பிறகு தான் தீர்வு காண முடியும். பாகப்பிரிவினை பரிகாரம் கோராமல் விளம்புகை பரிகாரம் கோர முடியாது என்பது, விசாரணைக்கு பிறகு தான் முடிவு செய்ய முடியும். குறைவாக சொத்து மதிப்பீடு செய்யப்பட்டு வழக்கு தாக்கல் செய்திருப்பதாக கூறியிருப்பது ஏற்புடையதல்ல. 2/3 பாகம் குறித்து விளம்புகை கோருவதற்கு உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்க மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார்கள். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

12. அசல் வழக்கில், வழக்குரையில், 'A' மற்றும் 'B' அட்டவணை சொத்துக்கள், A.சுப்பிரமணி என்பவருக்கு 10.10.1995 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் மூலம் கிடைத்த சொத்துக்கள் ஆகும். A.சுப்பிரமணியின் வாரிசுகள் வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆவார்கள். வாதிகளின் தகப்பனார், 'A' அட்டவணை சொத்தை பொறுத்து 15.11.2012 தேதியில் 2ம் பிரதிவாதிக்கும் 'B' அட்டவணை சொத்தை 2, 3 பிரதிவாதிகளுக்கும் தானபத்திரம் மூலம் எழுதிக் கொடுத்து விட்டார்.

A.சுப்பிரமணி தனது மகள்களுக்கு சொத்துக்களை எழுதி வைக்காமல் தனது மகன்களுக்கு மட்டும் எழுதி வைத்திருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. வாதிகளுக்கு 'A' மற்றும் 'B' அட்டவணை சொத்துக்களில் பங்கு உள்ளது. அவை வாதிகளுக்கு மூதாதையர் சொத்தாகும். 15.11.2012 தேதியிட்ட தானபத்திரம் எழுதிய போது வாதிகள் தங்களுக்கு திருமணமான வீட்டில் இருந்தார்கள். அவர்களுக்கு மேற்படி தான பத்திரங்கள் குறித்து விவரம் தெரியாது. தங்களது தந்தை A.சுப்பிரமணி 'A' மற்றும் 'B' அட்டவணை சொத்துக்களில் தங்களுக்குரிய பாகத்தை வழங்குவார் என்று வாதிகள் நம்பினார்கள். வாதிகளின் தந்தை 10.05.2024ல் இறந்து விட்டார். வாதிகள் தங்களது தந்தையார் எழுதி வைத்த தானபத்திரம் குறித்து 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் கேட்டார்கள். 2ம் பிரதிவாதி வாதிகளுக்கு உரிய பாகத்தை 'A' அட்டவணை சொத்திலிருந்து கொடுக்க ஒப்புக் கொண்டார். ஆனால் 3ம் பிரதிவாதி ஒப்புக்கொள்ளவில்லை. வாதிகள் தங்களது வழக்கறிஞர் மூலம் 29.01.2025–ம் தேதி 3ம் பிரதிவாதிக்கு சொத்தை உரிமை மாற்றம் செய்யக்கூடாது என்று அறிவிப்பு அனுப்பினார். 29.01.2015ஆம் தேதி 3ம் பிரதிவாதி தனது மனைவியான 4ம் பிரதிவாதிக்கு 'B' அட்டவணை சொத்தை பொறுத்து தானபத்திரம் எழுதி கொடுத்துவிட்டார். அதே தேதியில் 4ம் பிரதிவாதி 'B' அட்டவணை சொத்தை 5, 6 பிரதிவாதிகளுக்கு கிரையம் எழுதிக் கொடுத்து விட்டார். மேற்படி இரண்டு பரிமாற்றங்களும் சட்டப்படி ஏற்புடையதல்ல. 12.02.2025ம் தேதியன்று வாதிகள் வழக்கறிஞர் மூலம் 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினார்கள். ஆனால் பிரதிவாதிகள் சமரசத்திற்கு ஒத்துவரவில்லை. 'B' அட்டவணை சொத்தை பொறுத்து தனியாக பாகப்பிரிவினை வழக்கை பிரதிவாதிகள் தாக்கல் செய்ய இருக்கிறார்கள். எனவே 'A' அட்டவணை சொத்தில் தங்களுக்கு 2/3 பாகம் உள்ளது என்பதை விளம்புகை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார்கள் என்று வழக்குரையில் விவரம் கூறப்பட்டுள்ளது.

13. தாவா சொத்துகள் வாதிகளின் தகப்பனாருக்கு பாகமாக கிடைத்த சொத்துகள் என்பதை இரு தரப்பிலும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். வாதிகளின் தகப்பனார் இறப்பதற்கு முன்பு 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் 2012ஆம் ஆண்டில் எழுதி வைத்துள்ளார். வாதிகளின் தகப்பனாரும், வாதிகளும், 2,3 பிரதிவாதிகளும் சேர்ந்து ம.சா.ஆ.1–ன் மூலம் கூட்டாக சேர்ந்து சொத்தை 3ம் நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. வழக்கு சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. எனவே, வழக்கு சொத்துகளை பொறுத்து இருதரப்பு விசாரணை மூலம் தான் முழுமையாக தீர்வு காண முடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. வழக்கு 'A' அட்டவணை சொத்தை பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள். அதில் வாதிகளுக்கு 2/3 பாக விளம்புகை பரிகாரத்தை வழங்க

தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள். 'B' அட்டவணை சொத்தை பொறுத்து 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். அதன் அடிப்படையில் 4ம் பிரதிவாதி 5, 6 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துள்ளார். உரிமை மூலம் குறித்து வழக்கில் பிரச்சனை வாதிகளால் எழுப்பப்பட்டுள்ளது. எனவே அதனை தீர்வு காண்பதற்கு இருதரப்பு விசாரணை அவசியம் என்றும், வழக்கிற்கு வழக்கு மூலம் உள்ளது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. வாதிகள் விளம்புகை பரிகாரம் கோரியுள்ள நிலையில், தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச் சட்டத்தின் படி பிரிவு.25(a) படி நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டும் என்று இந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூறியிருப்பது ஏற்கும் வகையில் உள்ளது. எனவே, அது குறித்து அசல் வழக்கில் வாதிகளுக்கு உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்த வாய்ப்பு வழங்கிய பிறகு, நீதிமன்ற கட்டணத்தை வாதிகள் செலுத்த தவறினால் வழக்கை தள்ளுபடி செய்வதற்கு வாய்ப்பு உள்ளது. வழக்கு சொத்துகளை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோருவதற்கு காலவரையறை முடிந்து விட்டதாகவும், வழக்கு காலாவதி தோஷத்தால் முடிந்து விட்டதாகவும் இம்மனுவில் கூறப்பட்டுள்ளது (Barred y Limitation).

14. வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை குறித்து வழக்கு விசாரணையின் பேரில் தான் முடிவு செய்ய முடியும். காலவரையறை தோஷம் என்பது சங்கதி மற்றும் சட்டம் கலந்தது என்பது சட்ட நிலைமை என்று நீதிமன்றம் கருதுகிறது. இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 7 விதி 11–ல் எந்த உட்பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டது என்று சரியான விளக்கம் மனுவில் கூறப்படவில்லை. இம்மனுவில் குறிப்பிட்டு இருப்பது போல் வழக்கு மூலம் இல்லை என்பது ஏற்கும் படி இல்லை. காலாவதி தோஷத்தால் வழக்கு பாதிக்கப்பட்டதா என்பது குறித்து வழக்கு விசாரணையின் பேரில் தான் முடிவு செய்யப்படும். நீதிமன்ற கட்டணம் குறித்து வாதிகளுக்கு கால அவகாசம் அளித்து அதனை கட்ட தவறினால் அதன் பேரில் முடிவு செய்ய செய்யலாம் என்று நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்த மனு ஏற்கும் வகையில் இல்லை என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது. வழக்கில் தீர்வு காணுவதற்கான பிரச்சினைகள் உள்ள நிலையில் வழக்குரையை நிராகரிக்க தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.01.08 17:31:30 +0530

**சார்பு நீதிபதி,**

**ஆரணி.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:—</u>** இல்லை

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்:—</u>**

28.02.2013 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :—</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றிவணங்கள்:—</u>** இல்லை

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.01.08 17:31:41 +0530

**சார்பு நீதிபதி,**

**ஆரணி.**